இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் செய்யப்பட்டது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: ஒரே பருவத்திலே விளைச்சல் செய்யப்பட்டது. ஆனால், 90 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் என்று சொன்னால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்பு வரும்பொழுது தருகிறேன். ஒரே கேள்வியில் எல்லோரும் வாய்ப்புக் கேட்டால் எப்படி தர முடியும்? வாய்ப்பு தர முடியாது. ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு வரும்பொழுது கண்டிப்பாக தருகிறேன். உங்களுக்கும் தருகிறேன். உட்காருங்கள். வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

சமுதாயக் கூடம்

***1173—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, அத்திப்பாளையம் ஊராட்சி, காமராஜ் நகரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2016 ஆகஸ்ட் 3]

இந்துக்களுக்கு புனிதக் கடவுள் இராமரும், சிவனும். இஸ்லாமியர்களுக்கு புனிதக் கடவுள் அல்லா. கிறிஸ்தவர்களுக்கு புனிதக் கடவுள் இயேசு. ஆனால், 8 கோடி தமிழர்களுக்கும் புனிதத் தெய்வம் ஒருவர்தான், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முதல்வர் பதவியால் அழகு பெற்றவர்கள் சிலர், ஆனால் முதல்வர் பதவிக்கே அழகு சேர்த்தவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் வெற்றி கண்டவர்கள் சிலர், ஆனால் அரசியலையே வெற்றி கண்டவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேதத்தை உச்சரித்தால் என்ன வரும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், அம்மா என்னும் புரட்சித் தலைவி நாமத்தை உச்சரித்தால் நாளெல்லாம் நன்மை வரும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடி வணங்கி என் பதிலை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்நிலையில் உறுப்பினரின் கோரிக்கை முறையாக பரிசீலிக்கப்பட்டு, துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பெறப்படும் ஆவணங்களைப் பரிசீலித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று தேவையின் அடிப்படையில் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, கருத்துகளின் கலைப்பூங்காவாக, எண்ணங்களின் வண்ணச்சோலையாக, அன்பும், பண்பும், பண்பட்ட முதிர்ச்சியும் ஒருங்கே பெற்று, அன்னை தமிழகத்தை வழிநடத்தும் வான்புகழ் கொண்ட வரலாற்று அன்னையின் பாதம் தொட்டு வணங்கி,

யார் பக்கம் யார் போனால் என்ன, மக்கள் நம் பக்கம், ஊராரை நாம் ஏய்த்தது இல்லை நம் ஆட்சி பரிசுத்தம் என்ற அடிப்படையிலே (மேசையைத் தட்டும் ஒலி) கோவை, கவுண்டம்பாளையம் தொகுதியிலே இரண்டாவது முறையாக என்னை வேட்பாளராக அறிவித்து, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் வாக்கு சேகரித்து வெற்றி பெறச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, கவுண்டம்பாளையம் தொகுதி, அத்திப்பாளையம் ஊராட்சி, காமராஜ் நகரில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற காலத்தில் அங்கே சமுதாயக் கூடம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஆதி திராவிடர் இன மக்களுக்கு கிள்ளிக் கொடுத்தவர்கள் மத்தியில் அள்ளிக் கொடுத்த அட்சயப் பாத்திரம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் 50 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை, அம்மாவின் ஆணையோடு துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்களின் அடிப்படையில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத்தின் தலைவர், மண்ணின் மைந்தர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் எதிர்கால நம்பிக்கை*

2016 ஆகஸ்ட் 3]

நட்சத்திரம் அண்ணன் தளபதி அவர்களுக்கும், நீண்ட கெஞ்சலுக்கு பிறகு வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் வாய்ப்பு வரும்பொழுது கொடுக்கிறேன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதியில் ஆதி திராவிடப் பெருமக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய குருமனாங்குடியில் ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் என்பது ஆதி திராவிட மக்கள் வாழும் பகுதியில், அவர்கள் ஒன்றுகூடி, தங்களுக்குள் நடைபெறும் நிகழ்வுகளை இந்தச் சமுதாயக் கூடத்தில் நடத்துவதற்காக, சமுதாயக் கூடங்கள் கட்டி வழங்கப்படுகின்றன. அந்த வகையில், ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதியைக் கருத்தில்கொண்டு, மக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும். கட்டி முடிக்கப்பட்ட சமுதாயக் கூடங்கள் தொடர்புடைய பஞ்சாயத்து ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்படும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 50 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள இடத்தில், மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வழிவகை

செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டத்தைப் பற்றி நான் தொடர்ந்து நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறேன். எனவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், தொடர்ந்து நினைவுபடுத்தவில்லை, நீங்கள் இன்று காலையில்தான் கொடுத்துள்ளீர்கள். (குறுக்கீடு) இன்று காலையில்தான், நீங்கள் என்னிடம் கொடுத்துள்ளீர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கொடுத்துள்ளேன். இன்றைக்கு கொடுத்தது இரண்டாவது தடவையாகும். (குறுக்கீடு) நான் தொடர்ந்து பேசட்டுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது விளக்கம் தருவதாக இருந்தால், நான் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அத்திக்கடவு–அவினாசி திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் உள்ளதா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*